குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.எம்.பி.எண்.15/2026

ம.சா.1

2026–ம் ஆண்டு பிப்ரவரி 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுபடையப்பா | தொழில் | |
| தந்தை பெயர் | இளம்பரிதி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.54 மணி,

Complainant Arupadaiyapa present. Advocate Mr.M.Senthilkumar present for Complainant.

**முதல் விசாரணை :**

1. நான் வைத்தியநாதபுரம், செட்டிக்காட்டில் குடியிருந்து, கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எனக்கும், காவியா என்பவருக்கும் கடந்த 10.12.2019 ஆம் தேதி தருமபுரி மாவட்டம் நெருப்பூரில் உள்ள முருகன் கோயிலில் காதல் திருமணம் நடைபெற்றது. கடந்த 2023 ஆம் ஆண்டு எனது மனைவிக்கு வளைகாப்பு முடிந்து அவரது பெற்றோர் வீடான செவலானூருக்கு சென்றார். பின்பு சேலம் அரசு மருத்துவமனையில் குழந்தை பிறந்தததது. அதன்பின்பு, அவர் என்னுடன் வந்து சேர்ந்து வாழவில்லை.

2. பின்பு, எனது மனைவி காவியா அவரது அம்மாவான பூங்கொடி என்பவரது சொல்பேச்சுக் கேட்டுக்கொண்டு, என்னுடன் சேர்ந்து வாழாமல் இருந்து வந்தார். மேற்படி பூங்கொடி எங்கள் இருவரையும் பிரித்து காவியாவிற்கு வேறு ஒரு திருமணம் செய்து வைக்கும் எண்ணத்துடன் இருந்தார். நான் காவியாவிற்கு குழந்தை பிறந்த நான்கு நாட்கள் கழித்து அவரது பெற்றோர் வீட்டிற்கு அவரை பார்க்க சென்றபோது, பூங்கொடி, சதீஷ், முருகன், பாலாஜி ஆகியோர் என்னை அடித்துவிட்டார்கள்.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.03 17:25:57 +0530

3. அதன்பின்பு ஒரு மாதம் கழித்து எனது மனைவி காவியா என்னுடன் போனில் நல்லமுறையில் பேசிவந்தார். ஆனால், காவியாவின் தாய்மாமா மணியும், அவரது அம்மா பூங்கொடியும் காவியாவிற்கு வேறு திருமணம் செய்து வைக்க முடிவெடுத்தார்கள். அதன்பின்பு, காவியா அவரது செல்போன் எண்ணை சுவிட்ச் ஆப் செய்து விட்டார். என்னுடன் பேசுவதையும் நிறுத்திவிட்டார். பின்பு 2025 ஆம் ஆண்டு என்னிடமிருந்து விவாகரத்து கோரி மாண்புமிகு மேட்டுர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

4. பின்பு, 3 வாய்தா தேதிகளில் நான் மேற்படி நீதிமன்றத்தில் விவாகரத்து மனு குறித்து ஆஜர் ஆனேன். அந்த வழக்கின் தற்போதைய நிலை எனக்கு தெரியவில்லை. கடந்த 10.11.2025 ஆம் தேதி காலை 04.30 மணிக்கு அமரகுந்தியில் உள்ள சிவன் கோயிலில் வைத்து எனது மனைவி காவியாவை கிருஷ்ணன் என்பவருக்கு எனது மாமியார் பூங்கொடி, அவரது தம்பி மணி ஆகியோர் திருமணம் செய்து வைத்தார்கள்.

5. எனது தங்கை தென்றல் மற்றும் அவரது கணவர் மணி அமரகுந்தியில் உள்ள சிவன் கோயிலுக்கு வாரவாரம் செல்வார்கள். அவ்வாறு சென்றபோது காவியா திருமணம் செய்து கொண்டது தெரிந்து அவரை கேட்டபோது, கிருஷ்ணன், மணி, பூங்கொடி ஆகியோர் எனது தங்கை தென்றலை ஆயுதங்கள் கொண்டு கொலைமிரட்டல் விடுத்தார்கள். அதன்பின்பு எனது தங்கையின் கைப்பேசி எண்ணுக்கு வாட்ஸ் அப் மூலம் காவியா – கிருஷ்ணன் திருமண புகைப்படத்தை அனுப்பி வைத்தார்கள்.

6. எனக்கும், காவியாவிற்கும் திருமணம் நடந்து, ஒரு பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில் என்னை பிரிந்து அவர் வேறு திருமணம் செய்து கொண்டார். எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.14 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.02.03 17:26:01 +0530